# 2 நாட்டார் பாடல்கள்

ஏட்டுக் கல்வி இல்லாதோர் பாடிய பாடல்களே நாட்டார் பாடல்கள் எனப்படும். நாட்டார் பாடல் உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் காணப்படுகின்றது. இப் பாடல் நாடோடிப் பாடல், கிராமியப் பாடல் என்று பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றது. இவை எழுத்தில் எழுதப்படவில்லை. வாய்மொழியாகவே வழங்கிவந்தன. இவை பேச்சுவழக்கில் அமைந்தவை.

## 1. தாலாட்டுப் பாடல்

தாய் தன் குழந்தையைத் தூங்கச் செய்வதற்காகப் பாடும் பாடல் இது.



ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
அன்பே நீ நித்திரை செய் ஐயா நீ நித்திரை செய்
அம்மான் மகன் வருவான் அருகிருந்து விளையாட
அழகான பொம்மைகளும் ஆனைகளும் அவன் தருவான்
அழகுச் சிலையே அன்பான கண்மணியே, கண்ணுறங்கு
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ

கண் மணியே நீ உறங்கு கற்கண்டே நீயுறங்கு
பொன் மணியே நீ உறங்கு இரத்தினமே கண்ணுறங்கு
மாமி மலைத்திடுவாள் மச்சினியும் ஏங்கிடுவாள் நான்
பெற்றெடுத்த கண்மணியே பேர் வழங்க நீ வளராய்
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ.

## 2. ஏர் பூட்டும்போது பாடும் பாடல்

உழவர் கலப்பையை நல்ல நாளில் வெளியே எடுப்பர். வயலுக்குச் சென்று முதல் உழவின்போது பூசை செய்வர். அப்போது இப் பாடலைப் பாடுவர். இப் பாடல் ஏர்மங்கலம் என்றும் பொன் ஏர் மங்கலம் என்றும் சொல்லப்படும்.



பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே
வேளாண்மை விளையவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே
நல்லமழை பெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே.


### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| பட்டி | - | மாட்டுத் தொழுவம் |
| தம்பிரானே | - | தலைவனே, கடவுளே |
| வேளாண்மை | - | விவசாயம் |

| | | |
|---|---|---|
| ஏர் | - | கலப்பை |
| மேழி | - | கலப்பை |

## 3. மீனவர் பாடல்

கடலில் மீன் பிடிப்பது ஆபத்தானது. தமது நிச்சயமற்ற வாழ்விலும் மீனவர் மகிழ்ச்சியுடன் பாடுவதை இப் பாடல் கூறுகிறது.



புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே.

கடல் கடந்து செல்வதற்குத் தோணியுமுண்டு
கட்டைச்சூறா உழுவைமீன் கடலிலேயுண்டு
கடவுள் தந்த கைகளே முழுப்படவுண்டு
- மச்சான் முழுப்படவுண்டு.

கடல்கடந்து மீன்பிடிப்போமே - வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே.
முப்பதுநாள் உழைத்துழைத்து நிறையப்பணம் வாங்கி –
அதை மூன்றுநாளில் திண்டுவிட்டுக் கடனையும் வாங்கி,
பாக்கிநாளில் பெரும் பகுதியைப் பட்டினியாக்கி – மனப்
பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்.
- மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்.

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே.
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே.

| **பேச்சு வழக்கு** | | **எழுத்துவழக்கு** |
|---|---|---|
| எடுத்துக்கிட்டு | - | எடுத்துக்கொண்டு |
| பாக்கிநாள் | - | மீதிநாள் |
| மீன்பிடிக்காரர் | - | மீனவர் |
| சன்மம் | - | ஜென்மம், பிறவி |

## 4. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பாடல்

இலங்கையின் தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுப்பது தேயிலையே. இத்துறையில் முதுகெலும்பாக விளங்குபவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களே. அவர்கள் தமது நாட்டை, உறவினர்களைப் பிரிந்த சோகம் இங்கே கூறப்படுகிறது.



**வாடை அடிக்குதடி வடகாத்து வீசுதடி**
**சென்னல் அடிக்குதடி - நாம் சேந்துவந்த கப்பலிலே**

**எண்ணிக் குழிவெட்டி இடுப்பொடிஞ்சு நிக்கயிலே**
**வெட்டுவெட்டு எங்கிறாரே பொட்டுவச்ச கங்காணி.**

ஆத்தோரம் கொந்தரப்பு அதுநெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ – என் வல்லமை கொறஞ்சு தய்யா
ஊரான ஊர்இழந்தேன் ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்
பாரான கண்டியிலே பெத்ததாயும் வீடிழந்தேன்.

| **பேச்சு வழக்கு** | | **எழுத்து வழக்கு** |
|---|---|---|
| வடகாத்து | - | வடகாற்று |
| சேந்துவந்த | - | சேர்ந்துவந்த |
| இடிப்பொடிஞ்சி | - | இடுப்பொடிந்து |
| நிக்கயிலே | - | நிற்கையிலே |
| ஆத்தோரம் | - | ஆற்றோரம் |
| கொறஞ்சதையா | - | குறைந்ததையா |
| ஒத்தப் பனை | - | ஒற்றைப் பனை |
| பெத்த தாய் | - | பெற்ற தாய் |

## கிரகித்தற் பயிற்சி

**பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்.**

1. நாட்டார் பாடலைப் பாடியவர் யார்?
2. தாய் குழந்தையை எவ்வாறு அழைக்கிறாள்?
3. ஏர்மங்கலம் என்றால் என்ன?
4. மீனவர் தூக்கிச் சென்ற வலையின் பெயர் என்ன?
5. தொழிலாளர் குறிப்பிடும் ஊர் எது ?
6. தாலாட்டுப் பாடலில் தாயின் இலக்கு எத்தகையது எனக் கூறுக.
7. மீனவர் பாடலில் மீனவர்களின் துன்பநிலை/ வாழ்க்கைநிலை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
8. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் எவ்விதமான உணர்வு வெளிப்படுகிறது?

## செயற்பாடு

**பாடல்களை ஆசிரியர் பாட அவதானமாகக் கேளுங்கள்.**

1. பாடல்களைக் கூறுங்கள்.
2. பதம் பிரித்துக் கூறுங்கள்.
3. பாடல்களின் பொருளைக் கூறுங்கள்.

4. பாடல்களை இசையுடன் பாடுங்கள்.
5. பாடல்களை உரத்து வாசியுங்கள்.
6. நிறுத்தக் குறிகளை அவதானித்து வாசியுங்கள்.

## பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுங்கள்

1. உறங்கு
2. மேழி
3. வேளாண்மை
4. தோணி
5. கடல்

நீங்கள் விரும்பும் பாடலொன்றைப் பிரதிபண்ணுங்கள்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர் என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

## சொல் வளம்

### ஒரு பொருள் பன்மொழி

ஒரு சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள பல சொற்கள் இருக்கலாம். உதாரணமாக அன்பு என்ற பொருள் தரும் சொல்லுக்கு நேயம், நேசம், பற்று, பாசம், பரிவு, கனிவு எனப் பல சொற்கள் உள்ளன. இவ்வாறு ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களைக் கொண்ட சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ☆ **துன்பம்** - துயர், இன்னல், அல்லல்.
- ☆ **சந்திரன்** - மதி, நிலவு, திங்கள்
- ☆ **வீடு** - இல்லம், மனை.
- ☆ **சோறு** - சாதம், அன்னம்.
- ☆ **அழகு** - வனப்பு, எழில், பொற்பு
- ☆ **அறிவு** - மதி, புத்தி.
- ☆ **ஆசிரியர்** - ஆசான், குரு.

☆ **நித்திரை** - உறக்கம், தூக்கம்.
☆ **குதூகலம்** - மகிழ்ச்சி, இன்பம், உவகை
☆ **அம்மா** - தாய், மாதா, அன்னை
☆ **அப்பா** - தந்தை, பிதா, அன்னை
☆ **உடல்** - உடம்பு, மெய், காயம்
☆ **நண்பன்** - தோழன், மித்திரன், சகபாடி
☆ **கதிரவன்** - ஞாயிறு, சூரியன், பகலவன், தினகரன், வெய்யான்
☆ **பாடல்** - பாட்டு, கீதம், பண், பா
☆ **வையகம்** - பூமி, உலகம், படி, பூலோகம்
☆ **விருப்பம்** - ஆசை, ஆர்வம், அன்பு, காதல்
☆ **தூரம்** - தொலைவு, சேய்மை.
☆ **கடல்** - ஆழி, சமுத்திரம், சாகரம்
☆ **மலை** - கிரி, குன்று.

## பல பொருள் ஒருமொழி

ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கலாம். உதாரணமாக மா என்ற சொல்லுக்குப் பெரிய, மாமரம், அரிசிமா, குதிரை, வலிமை, ஆகாயம் எனப் பல பொருள்கள் உள்ளன. இத்தகைய சொல் பல பொருள் ஒரு மொழி எனப்படும். அத்தகைய சில சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

☆ **அகம்** - வீடு, மனம்
☆ **ஆறு** - நதி, வழி, ஓர் எண்
☆ **கவி** - பாட்டு, புலவன்
☆ **விடை** - பதில், எருது
☆ **அரசு** - அரச மரம், நாடு
☆ **அலை** - கடல் அலை, அலைந்து திரிதல்
☆ **இசை** - சங்கீதம், சம்மதித்தல்
☆ **ஓடு** - வீட்டின் ஓடு, ஓட்டம்
☆ **கால்** - கால்வாசி - (1/4), உடல் உறுப்பு
☆ **ஒளி** - மறைதல், பிரகாசம், சுடர்

## செயற்பாடு

**பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் ஒத்த கருத்துள்ள ஒரு சொல் எழுதுங்கள்.**

1. அழகு ........................
2. உவகை ........................
3. மதி ........................
4. சூரியன் ........................
5. வையகம் ........................

**பின்வரும் சொற்களுக்கு இரு பொருள் எழுதுங்கள்.**

1. ஆறு ................................ ................................
2. ஓடு ................................ ................................
3. ஒளி ................................ ................................
4. கவி ................................ ................................
5. அகம் ................................ ................................

## காலத்தை உணர்த்தும் சொற்கள்

வினை செயலைக் காட்டும். வினைச் சொல்லின் இடைநிலைகள் காலத்தை உணர்த்தும். காலத்தைக் காட்டும் உறுப்பு இடைநிலை எனப்படும்.

காலம் மூன்று வகைப்படும். அவை

**இறந்த காலம்**
**நிகழ் காலம்**
**எதிர் காலம்**

வினைச் சொற்கள் அனைத்தும் மூன்று காலங்களுக்கும் உரியவை.

சிறுமிகள் நேற்று நடனம் ஆடினார்கள் - இறந்த காலம்
சிறுமிகள் இன்று நடனம் ஆடுகிறார்கள் - நிகழ் காலம்
சிறுமிகள் நாளை நடனம் ஆடுவார்கள் - எதிர் காலம்

ஆகிய வாக்கியங்களில் ஆடுதல் என்னும் வினை மூன்று காலங்களிலும் வந்துள்ளமையைக் காணலாம். குடி எனும் வினையடியை மூன்று காலங்களிலும் பெண் பாலில் பின்வருமாறு எழுதலாம்.

கல்யாணி நேற்றுப் பாலைக் குடித்தாள். - இறந்தகாலம்
கல்யாணி இன்று பாலைக் குடிக்கிறாள். - நிகழ்காலம்
கல்யாணி நாளை பாலைக் குடிப்பாள். - இறந்தகாலம்

## செயற்பாடுகள்

**பின்வரும் வினயடிகளை மூன்று காலங்களிலும் ஆண் பாலில் எழுதுங்கள்.**

வாடு, பாடு, செய், உண், கடி, பேசு, எழுது, கீறு, எழு, விழு

| வினையடி | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| வாடு | வாடினான் | வாடுகிறான் | வாடுவான் |
| பாடு | | | |
| செய் | | | |
| உண் | | | |
| கடி | | | |
| பேசு | | | |
| எழுது | | | |
| கீறு | | | |
| எழு | | | |
| விழு | | | |